தமன பிரதேச சபை - 2024
----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தமன பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளடங்களாக நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172(1) உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 (1) உபபிரவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தமன பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அபடிப்டை

இவ்வறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந்த கணக்காய்வு நியமங்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவம் மற்றும் தொடர்புடைய கட்டுப்படுத்தும் தர்ப்பினரின் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக முன்வைத்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதாக நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடும் செயற்பாடுகள் தொடர்பாக பரீட்சிக்கும் பொறுப்பு, கட்டுப்படுத்தும் தரப்பினரால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரியவாறு புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான

கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக் கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைமுறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- பிரதேச சபையின் கட்டுப்பாட்டு சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்து மூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக காலவரையறைகளினுள் மற்றும் உரிய சட்ட விதிகளிற்கு இணங்க பெறுகை செய்யப்பட்டு பயன்படுததப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் பிரகாரம் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அறவிட வேண்டிய நிலுவை விளம்பர பலகை வருமானம் ரூபா 147,375 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	விளம்பர பலகைக்கான நிலுவை மீதிகள் ஆவணப்படுத்தப்படாததால் 2024 ஆண்டிற்காக கிடைக்க வேண்டிய தொகை கணக்கீடு செய்யப்படவில்லையென.	நிலுவை வருமானத்தை இனங்கண்டு ஆவணப்படுத்தி சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டில் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 654,518 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருநதது.	அந்த தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதென.	வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(இ)	2023 ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டணம் ரூபா 1,253,090 தொகையான நிலுவை முத்திரைக் கட்டணக் கணக்கில் குறிப்பிடப்படவில்லை.	ஏற்றுக் கொள்கிறேன். நிலுவை முத்திரைக் கட்டணம் கணக்கு வைக்கும் போது ஏற்பட்ட தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிலுவை வருமானத்தை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.

1.6.2 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆண்டினுள் தேறிய காசு அசைவிற்கு ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசிற்கு சமமானவற்றை கூட்டிய பின்னர் பெறுமதி ரூபா 78,959,959 ஆனமையால் அண்டிறுதி காசு மற்றும் காசு மற்றும் காசிற்கு சமமானவற்றின் பெறுமதி ரூபா 5,381,226 ஆனதில் அதற்கிடையே ரூபா 73,578,733 ஆன இணக்கமின்மை அவதானிக்கப்பட்டது..	ஏற்றுக் கொள்கிறேன். இது தொடர்பாக பரீட்சித்து குறித்த தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.	காசுப்பாய்சல் கூற்றை சரியாக தயாரிக்க வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டில் வழங்கல் உபகரணம் மற்றும் மூலதன உதவி பேரேட்டு கணக்கு பிரகாரம் வருமான செலவு கணக்கிற்கு மாற்றிய பெறுமதி மற்றும் வருமான செலவு கணக்கில் குறிப்பிட்டிருந்த பெறுமதிக்கிடையே ரூபா 1,140,216 ஆன வித்தியாசம் காணப்பட்டது.	ஏற்றுக் கொள்கிறேன். இது தொடர்பாக பரீட்சித்து குறித்த தவறை சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.	இணக்கமின்மையை இனங்கண்டு அவற்றை சரிசெய்ய வேண்டும்.

1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிக்கூற்றுக்களில் குறிப்பிட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 4,294,657 ஆன 11 கணக்கு விடயங்களிற்கான நிலையான சொத்து பதிவேடு, அட்டவைண, மீதி உறுதிப்பாடு மற்றும் செலுத்த வேண்டிய தரப்பினர் உறுதி அட்டவைண ஆகிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாததால் திருப்திகரமாக ஒப்பாய்வு செய்ய முடியவில்லை.	2010 அல்லது அதற்கு முன்னரிலிருந்து முன்கொண்டு வரப்படும் இப் பெறுமதிக்கு கொள்வனவு செய்தது தொடர்பான தகவல்கள் ஏதும் இல்லையென.	நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் கணக்குகளை உறுதி செய்யும் சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.
(ஆ)	நடைமுறை வேலையாக ஐந்தொகையில் காட்டியுள்ள ரூபா 497,303 தொகையை செலவிட்டு மேற்கொண்ட நிர்மாணத்திற்காக திட்டவட்டமாக செலவு செய்யப்பட்டுள்ளதா என உறுதி செய்து கொள்வதற்காக தேவையான கணக்காய்வு சான்றுகள் போதிவாறு சமர்ப்பிக்கப்படவில்லை.	பல ஆண்டுகளாக முன்கொண்டு வரப்படும் இந்த நடைமுறை வேலையாக குறிப்பிட்டுள்ள மீதி தொடர்பான தகவல்களை உறுதி செய்து கொண்ட பின்னர், இந்த மீதியை கணக்குகளில் இருந்து அகற்ற நடவடிக்கை எடுப்பதென.	சரியான தகவல்களை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 இணக்கமின்மைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு	இணக்கமின்மை	சபையின் கருத்துரை	பரிந்துரை

(அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி			
(i) 5 (xii) விதி	காசு மற்றும் களஞ்சிய நடவடிக்கைகள் தொடர்பாக பொறுப்புக் கூறும் உத்தியோகத்தர் இடமிருந்து போதிய பிணையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்போது நிதி உதவியாளர், களஞ்சிய விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் சாரதிகளிடம் இருந்து பிணை பெற்று கணக்கு ஆரம்பித்துள்ளதென.	நிதி மற்றும் நிர்வாக விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii) 218 விதி	சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பார ஒவ்வொறு ஆண்டிற்கும் ஒரு முறையேனும் பரீட்சிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் காணி மற்றும் கட்டிடங்கள் பற்றிய பரீட்சிப்பொன்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	நிதி மற்றும் நிர்வாக விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்			
(i) திறைசேரி செயலாளரின் இலக்கம் 01/2020 மற்றும் 2022 ஆகஸ்ட் 18 திகதிய அரச நிதி சுற்றறிக்கையின் திருத்திய நிதிப் பிரமாணம் 371(2) (ஆ)	ஏதேனும் விசேட பணிக்காக பதவிநிலை உத்தியோகத்தரிற்கு மாத்திரம் ஒரு சந்தர்ப்பத்தில் ரூபா 100,000 உச்சம் வரை நிமித்த உப கட்டுநிதி வழங்க முடியுமான போதும் தபன பிரதேச சபையின் பதவிநிலையல்லாத உத்தியோகத்தரிற்கு 10 சந்தர்ப்பங்களில ரூபா 100,000 எல்லையை விஞ்சி ரூபா 162,500 ஆன முற்பணம் வழங்கப்பட்டிருந்தது.	ஏற்றுக் கொள்கிறேன். இந்த முற்பணம், அலுவலக பல்வேறு நடவடிக்கைகளிற்காக வழங்கியுள்ளதால், அந்த முற்பணம் மீள் நிரப்பப்பட்டுள்ளது.	நிதிப்பிரமாணம் பிரகாரம் திட்டவட்ட எல்லையினுள் முற்பணம் வழங்க வேண்டும்.
(ii) நிதிப்பிரமானம் 571	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று வைப்பு அட்டவணை பிரகாரம் செலுத்த வேண்டிய மீதிகளை இனங்காணாத ரூபா 3,004,349 பெறுமதியான டென்டர், ஒப்பந்த மற்றும் ஏனைய வைப்பு மீதிகள் மற்றும் வைப்பு செய்த திகதி	ஏற்றுக் கொள்கிறேன். எதிர்காலத்தில் இந்த மீதிகள் தொடர்பாக நி.பி 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கிறேன்.	நிதிப்பிரமானம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
	முதல் இரண்டு ஆண்டுகளை விஞ்சிய வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்ட்ட நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 2024 திசெம்பர் 31 திகதியுடள் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 692,077 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,766,125 ஆனது.

2.2 நிதிக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபையின் வங்கிக் கணக்கிற்குரிய வங்கி இணக்கக்கூற்றில் 2022 ஆண்டு சனவரி மாதம் முதல் வங்கித்தவறாக குறிப்பிட்டுள்ள ரூபா 150,000 தொகையை தீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அங்கீகாரம் கிடைத்தவுடன் இலக்கம் 5719951 கொண்ட கணக்கில் உள்ள தொகையை இலக்கம் 5719952 கொண்ட கணக்கிற்கு மாற்றி, 5719951 கணக்கை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுப்பதென.	வங்கி செய்துள்ள தவறை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2.2 வருமான நிர்வாகம்

2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம்

தலைவரின் சமர்ப்பிக்கப்ட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கு மற்றும் கடந்த ஆண்டிற்குரியதாக மதிப்பிடப்பட்ட வருமானம், பில்லிட்ட வருமானம், சேகரித்த வருமானம் மற்றும நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் பின்வருமாறு.

	வருமான மூலங்கள்	2024				2023			
		மதிப்பிடப் பட்ட வருமானம்	பில்லிட்ட வருமானம	சேகரித்த வருமானம்	திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை	மதிப்பிடப் பட்ட வருமானம்	பில்லிட்ட வருமானம	சேகரித்த வருமானம்	திசெம்பர் 31 திகதி மொத்த நிலுவை
		ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
i.	வீதவரி மற்றும் வர	420,906	420,906	309,087	1,671,285	770,900	797,578	850,683	1,746,621
ii.	வாடகை	2,638,800	2,680,800	2,717,616	2,389,694	4,912,500	5,485,829	4,709,536	2,653,016
iii.	அனுமதிப்பத் திர கட்டணம	2,644,500	516,250	432,500	83,750	1,712,500	1,052,900	1,052,900	83,750
iv.	ஏனைய வருமானம	1,853,500	1,361,997	1,361,997	–	1,175,000	1,270,523	1,270,523	–
v.	கூட்டுத் தொகை	**7,557,706**	**4,979,953**	**4,821,200**	**4,144,729**	**8,570,900**	**8,606,830**	**7,883,642**	**4,483,387**

2.3.2 வருமான சேகரிப்பின் செயலாற்றுகை

சபையின் வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை

(அ)	2024 திசெம்பர் 31 திகதி அறவிட வேண்டிய நிலுவை வீதவரி ரூபா 1,709,403 ஆனதுடன் அது அண்டின் மதிப்பீட்டுப் பெறுமதியான ரூபா 420,907 இனது நான்கு மடங்கிளும் அதிக தொகையானது.	வருமான பரிசோதகர் ஒருவர் 03 ஆண்டுகளாக இல்லாதமை நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளது. இவ்வாண்டினுள் வருமான பரிசோதகர் ஒருவர் எமது அலுவலகத்திற்கு இணைக்கப்பட்டுள்ளதால், வீதவரி அறவிட எதிர்பார்ப்பதென.	நிதி நிர்வாக விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் நிலுவை வருமானத்தை வரைவில் அறவிட வேண்டும்.
(ஆ)	நீண்ட காலமாக அறவிடாது காணப்படும் ஏக்கர் வரி பெறுமதி ரூபா 230,850 இனை தீர்ப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பல ஆண்டுகளாக முன்கொண்டு வரப்படும் மீதியாவதுடன், இது தொடர்பான எவ்வித தகவல்களும் இல்லாததால் தேவையான நடவடிக்கை முடியாதுள்ளதென.	தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	2024 திசெம்பர் 31 திகதி நிலுவை கடை வாடகை ரூபா 2,621,066 ஆனதுடன் அந்த மீதி ஆண்டு 01 முதல் 03 இற்கு அதிக காலமாக அறவிட வேண்டிய 31 நிலுவை மீதிகளுடன் கூடியதாகும்.	வருமான பரிசோதகர் ஒருவர் 03 ஆண்டுகளாக இல்லாதமை நேரடியாக தாக்கம் செலுத்தியுள்ளது.	நிலுவை தொகையை வரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	05 ஆண்டுகளை விட பழைய ரூபா 103,045 ஆன நிலுவை முத்திரை கட்டணம் கணக்குகளில் முன்கொண்டு வரப்படுவதுடன் அந்த மீதி உண்மையிலே சபைக்கு கிடைக்க வேண்டிய மீதியா என உறுதி செய்து கொள்ள அல்லது தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	2023 ஒக்டோபர் முதல் 2024 திசெம்பர் 31 வரை கிடைக்க வேண்டிய முத்திரை கட்டண வருமானத்தை இனங்கண்டு கணக்கீடு செய்ய, பல ஆண்டுகளாக கணக்குகளில் முன்கொண்டு வரப்படும் மீதிகளை உறுதி செய்து கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென.	ஆண்டிற்குரிய வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல்

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், பொது மக்களின் நல்வாழ்வு, வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை

பிரதேச சபை சட்டத்தின் 126 பிரிவின் கீழ் துணைச் சட்டம் விதிக்க வேண்டிய அனைத்து பணிகளையும் இனங்கண்டு துணைச் சட்டம் விதிக்க 2024 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	தற்போது எமது சபை 5 துணைச் சட்டங்களை விதித்துள்ளதுடன், எதிர்காலத்தில் துணைச் சட்டம் விதிக்க வேண்டிய அனைத்து பணிகளையும் இனங்கண்டு துணைச் சட்டம் விதிக்க நடவடிக்கை எடுப்பதென.	புதிய துணைச் சட்டங்களை விதிக்க வேண்டியதுடன் துணைச் சட்டம் விதித்துள்ள நடவடிக்கைகளை சட்டரீதியாக்கிக் கொள்ள வேண்டும்.

3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
பிரதேச சபை முன்னால் தவிசாளரினால் 2022 மே 09 திகதியளவில் சபைக்கு சொந்தமான கெப் வண்டியை உள்ளூராட்சி ஆணையாளரின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி கொழும்பில் நடந்த கூட்டமொன்றில் கலந்துகொண்டு திரும்பி வரும் போது கைகலப்பு சம்பவமொன்றிற்கு உள்ளாகி கெப் வண்டிக்கு அடித்து தீயிட்ட காரணத்தால் கெப் வண்டி முழுமையாக சேதமடைந்திருந்ததுடன் நிதிப்பிரமாணம 104(3) பிரகாரம் சமர்ப்பிக்கப்பட்ட ஆரம்ப அறிக்கை பிரகாரம் வண்டிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 8,500,000 ஆன போதும் காப்புறுதி இழப்பீடாக கிடைத்த தொகை ரூபா 5,000,000 ஆனதில் பிரதேச சபைக்கு ரூபா 3,500,000 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. நிதிப்பிரமாணம 104 பிரகாரம் முழுமையான விசாரணை ஒன்றை நடாத்தி பரந்துரையை செயற்படுத்தாது மீளாய்வாண்டில் கெப் வண்டியின் பெறுமதியை புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டு இருந்தது.	ஏற்றுக் கொள்கிறேன். தேவையான முன்நடவடிக்கை எடுக்க முயற்சி எடுப்பதென.	நிதிப்பிரமாணம் பிரகாரம முழுமையான விசாரணையொன்றை நடாத்தி அதன் பரிந்துரையை நடைமுறைப்படுத்த மற்றும் அங்கீகாரத்தை பெற்று பெறுமதியை ஏடுகளிலிருந்து அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 ஜுலை 18 திகதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இருந்து அன்பளிப்பாக கிடைத்த முத்திரை இயந்திரத்தின் (Epson dot printer LQ - 310) பெறுமதியை	ஏற்றுக் கொள்கிறேன். அதனை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதென.	பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.

	இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.		
(ஆ)	108 விளம்பரப் பலகைகளிலிருந்து 2024 ஆண்டிற்குரியதாக ரூபா 1,082,250 நிலுவையாக காணப்படுவதுடன் அந்த நிலுவை தொகையை அறவிட அல்லது செலுத்தாத அறிவித்தல் பலகைகளை கலற்றி அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வருமான பரிசோதகரின் உதவியை பெற்று காட்சிப்படுத்தியுள்ள விளப்பர அறிவித்தல் பலகை தொடர்பாக உறுதி செய்து கொண்ட பின்னர் தேவையான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பதென.	நிலுவை கட்டணத்தை அறவிட அல்லது விளம்பர பலகைகளை கலற்றி அகற்ற நடவடிககை எடுக்க வேண்டும்.
(இ)	பொது சந்தை, கிராமம் 07 முவங்கல, ஹிங்குரான வியாபார கட்டிடத் தொகுதிக்குரிய 44 கடையறைகளிற்கான நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுப்பதென.	நிலுவை தொகையை விரைவில் நடவடிககை எடுக்க வேண்டும்.

3.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்கு சொந்தமாக பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள 09 வாகனங்கள் விளைவற்று காணப்பட்டன.	பயன்படுத்த முடியாத நிலையிலுள்ள வாகனங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.	வாவனங்களின் உரிமையை சபைக்கு சுவீகரித்து அவற்றை ஏலவிற்பனை செய்ய அல்லது பராதீனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	தொழில் பயிறுவிப்பாளர் மற்றும் வருமான இலக்குகளை தயாரித்திருக்காததால் பிரதேச சபைக்கு சொந்தமான உடல் கட்டமைப்பு விருத்தி நிலையத்தில் ரூபா 1,496,025 ஆன உபகரணங்கள் 2022 ஆண்டு முதல் விளைவற்று நிலவின.	ஏற்றுக் கொள்கிறேன. டென்டர் வழங்கி உடல் கட்டமைப்பு விருத்தி நிலையத்தை ஆரம்பிக்க தயார் செய்துள்ளதென.	சரியான வருமான இலக்குகளை இனங்கண்டு உபகரணங்களை வினைத்திறனாக பயன்படுத்த வேண்டும்.

3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிக்கூற்றுடன் சமர்ப்பித்திருந்த காணி கட்டிட அட்டவணை பிரகாரம் சபைக்குரிய கட்டிடங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டுள்ள போதும் அந்த கட்டிடங்கள் அமைந்துள்ள காணிகளின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.	காணி மதிப்பீடு செய்யப்படாததுடன், சபை வருமான மதிப்பீட்டின் பிரகாரம் எதிர்காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கை	ஆதன பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.

		எடுக்க எதிர்பார்ப்பதென.	
(ஆ)	சபைக்குரிய 27 மயானங்கள் மற்றும் 10 மைதானங்களின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.	சொத்துக்கள் ஆவணப்படுத்தப்பட்டுள்ள போதும் மதிப்பிடப் படாததால் பெறுமதியை இனங்காண முடியாது. எனினும் சபையின் வருமான நிலைமையின் பிரகாரம் எதிர்காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதென.	பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(இ)	சபைக்குரிய மோடார் வண்டி மற்றும் 07 மாட்டு வண்டி வகைகளின் பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை.	இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் இரண்டு வாகனங்களின் பெறுமதி உள்ளடக்கியுள்ளதுடன ஐந்து வாகனங்களின் பெறுமதி பற்றிய எந்தவித ஆவணமும் சபையிடம் இல்லையென.	பெறுமதியை இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஈ)	சபையின் பொறுப்பிலுள்ள 09 வாகனங்களின் உரிமையை சபையின் பெயரில் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வாகன உரிமையை சுவீகரிக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதென.	உரிமையை சபையின் பெயரில் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

3.6 செயற்திட்டங்கள், செயற்பாடுகள் அல்லது மூலதன வேலைகளில் தாமதங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டில் கூட்டுப் பெறுமதி ரூபா 599,548 இற்குரிய 03 செயற்திட்டங்களிற்காக முன்மொழிவு அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் சபையினால் அந்த செயற்திட்டங்களை ஆரம்பிக்க தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	செயற்திட்டம் அங்கீகரிக்கப்பட்டு அதன் நிர்மாண காலம் முடிவடையும் வரை அந்த காலவாயில் நீர் வடிந்தோடியதால் மதிப்பிட்ட தொகையால் அந்த செயற்திட்டத்தை மேற்கொள்ள முடியாது போனதென.	குறித்த செயற்திட்டத்தை ஆரம்பிக்க முடியாததற்கான காரணத்தை கண்டறிந்து முன்நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.7 மனித வளங்கள் முகாமைத்துவம்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டில் பிரதேச சபையின் அங்கீகார பதவியணியின் 10 பதவிகளில் 19 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டன.	வெற்றிடங்களை நிரப்புவதற்காக பல சந்தர்ப்பங்களில் நாம் கோரியுள்ள போதும்,	வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதற்கிடையே 02 வருமான நிர்வாகத்தர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதால் வருடாந்த கணிப்பீடு மேற்கொள்ளும் போது, நிலுவை வருமான சேகரிப்பு, நிலுவை வருமானத்தை புறக்கணிப்பவர்களிற்கு சட்ட நடவடிக்கை எடுத்தல் போன்ற நடவடிக்கைகளை எடுக்க முடியாது காணப்பட்டது.	இது வரை வெற்றிடங்களிற்காக உத்தியோகத்தர்களை இணைக்கவில்லையென.	

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

4.1 கணக்காய்வுக் குழு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் 2019 சனவரி 12 திகதி இலக்கம் DMA/01–2019 கொண்ட உள்ளக கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு இஸ்தாபித்து குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.	கணக்காய்வ் குழு இஸ்தாபிக்கப்பட்டு உள்ளதுடன், குழுக் கூட்டங்களை நடாத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென.	கூட்டத்தை நடாத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் பிரதேச சபை பாதீட்டு வருமான செலவு மற்றும் உள்ளவாறான வருமான செலவு பரீட்சிப்பின் போது 04 வருமான விடயங்களில் 12 சதவீதம் முதல் 55 வரையும், 06 செலவின விடயங்களில் 43 சதவீதம் முதல் 143 சதவீதம் வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டதால் பாதீட்டை நிதி வழிகாட்டியாக பயன்படுத்தவில்லையென அவதானிக்கப்பட்டது.	பாதீடு தயாரிக்கப்படுவது நிறுவனத்திற்கு அங்கீகார பதவியணியினரிற்கு ஆவது இதற்கு காரணமாகவுள்ளதென.	பாதீட்டை நிதி வழிகாட்டியாக பயன்படுத்த முடியுமானவாறு தயாரிக்க வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2017 இன் 19 இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்ட பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் நோக்கங்களை அடைந்கொள்ள தேவையான தரவுகளை திரட்டி அதற்காக தேவையான நிதிஏற்பாட்டை வழங்க சபை போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	எதிர்காலத்தில் செய்யப்படும் அபிவிருத்தி செயற்பாடுகளில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வது தொடர்பாக அதிக கவனம் செலுத்தி நடவடிககை எடுக்கிறேன்.	நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டிகளை இஸ்தாபித்து அவற்றின் செயற்பாடுகளை மதிப்பீடு செய்ய வேண்டும.